கடிதம் எழுதுவது, நேரடியாக அங்குள்ள அமைச்சர்களோடு கலந்து பேசுவது இப்படித்தான் நாங்கள் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். உண்மையான காலதாமதத்தைப் போக்க வேண்டும் என்ற நல்ல உணர்ச்சி மத்திய அரசுக்கு விரைவிலே ஏற்படும் என்று நம்புகிறேன்.

தொழில் வளர்ச்சிக்கென தனி நில ஆர்ஜிதச் சட்டம்

* 327 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைத் தீவிரப்படுத்தும் பொருட்டு 'தனி நில ஆர்ஜிதச் சட்டம்' இயற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம். தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்காக, "மராட்டிய தொழில் வளர்ச்சிச் சட்டம், 1961" அடிப்படையில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான சட்டம்பற்றிய ஒரு செயற்குறிப்புப் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இது எப்பொழுது நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பரிசிலனை முடிந்ததற்குப் பின்னுலே.

திரு. கே. பி. எஸ். மணி: தற்காலிகமாகக் கிராமாந்திரங்களில் சிறு கைத் தொழில்களை ஆரம்பிக்கின்றவர்களுக்குப் பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு உள்ள சிறிய இடங்களை ஆர்ஜிதம் செய்துகொள்ள யூனியன் அல்லது டி.டி.சி-க்கு அனுமதி கொடுக்குமா அரசாங்கம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நில ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் இப்பொழுது செய்து வருகிறோம். கடைசியாக இதை இப்பொழுது ரெவின்யூத் துறை நிறைவேற்றி வருகிறது. புதிய சட்டப்படி தொழில் வளர்ச்சிக்கு என்று தனியாக ஒரு நடைமுறை, ப்ரொஸீஜர், பின்பற்றினல் எளிதான முறையில் தாமதமின்றி உடனடியாக நிலங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்குமா என்பதுபற்றி இந்தச் சட்டத்தில் ஆராய்ச்சி செய்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமங்கள்தோறும் இதைச் செய்வதற்கு என்ன முறைகளைப் பின்பற்றலாம் என்பதைச் சட்டத்தை உருவாக்கும்பொழுது ஆலோசித்து வருகிறோம்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: இந்த நில ஆர்ஜிதச் சட்டம் என்ருல் என்ன? அதற்கு விளக்கம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சட்டம் வரும்பொழுது விளக்கமாகப் பேசலாம்.

Driving Schools

* 328 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal pending before the Government to start driving schools by the traffic police in Tamil Nadu; and

(b) whether any such driving school will be started by the traffic police in Madras City in this year?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) இல்லை. எனினும் மாநகரங்கள், நகரங்கள் அனைத்திலும் வலவர் பயிற்சிப் பள்ளிகள் நிறுவ வேண்டும் என்ற சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரின் கருத்து ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டிரைவிங் ஸ்கூல் ஆரம்பிப்பதன் வழியாக, சென்னையிலே இப்பொழுது பஸ் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய பெரிய பெரிய விபத்துக்களைத் தடுக்கக்கூடிய அளவில், உடனே போலீஸ் தரப்பில் ஒரு டிரைவிங் ஸ்கூல் ஆரம்பித்து, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் உள்ள டிரைவர்கள் அத்தனை பேர்களுக்கும் பீரியாடிகலாக ஒரு சில நாட்களுக்காவது அந்த டிரைவிங் ஸ்கூலில் பயிற்சி அளித்து, நடைபாதை விபத்துக்களைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: டிரைவிங் ஸ்கூல் ஆரம்பிக்க வேண்டும் என்ற பிரச்னை 1965-ம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுதிருந்த தொழில் அமைச்சர் அதைப்பற்றிப் பரிசீலித்து, சென்னை, கோவை, திருச்சி ஆகிய இடங்களில் அமைக்கலாம் என்ற கருத்தை அவர் ஏற்றுக்கொள்ளாமல், திருச்சி, கோவையில் ஆரம்பிக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பொழுது கிடைத்திருக்கிற விபரங்களின்படி, கோவையில் நடைபெற்ற டிரைவிங் பள்ளியில், 1968 டிசம்பர் 1969 ஜூன் ஆகிய இரண்டு ஆண்டுகளில் ஒருவரும் டிரைவிங் ஸ்கூலுக்கு வராத நிலைதான் இருந்திருக்கிறது. பல தனியார், டிரைவிங் ஸ்கூல்கள் நடைபெற்று வருகின்றன. அவற்றை அரசாங்கம் அனுமதிக்கலாமா என்று இப்பொழுது ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் நடைபெற்ற டிரைவிங் ஸ்கூல்பற்றி எந்தவிதமான அறிவிப்பும் அதிகமாக இல்லை என்ற காரணத்தினால் அங்கே டிரைவர்கள் வராமல் இருந்திருக்கலாம். ஆனால், சென்னையைப் பொறுத்தமட்டில், சென்னையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களில் ஏற்படுகின்ற விபத்துக்களை நீக்குவதற்கு, சிறிய அளவிலாவது போலீஸ் தரப்பில் ஒரு டிரைவிங் ஸ்கூல் ஏற்பாடு செய்து, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிரைவர்ஸ் அத்தனை பேர்களுக்கும் அங்கு பயிற்சி அளிக்க அரசு முற்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள், ஹெவி டிரைவிங் லைசென்ஸ் உள்ளவர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை.

Bus fares in Kanyakumari district

*329 *Q*.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether this Government has increased the bus fare after the routes were nationalised in Kanyakumari district; and

(*b*) if so, how much?